**செய்தி வெளியீடு எண்: 754** **நாள்: 05.11.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.11.2019) தலைமைச் செயலகத்தில், வருவாய்த் துறை சார்பில் திருவனந்தபுரம், ஸ்ரீ பத்மநாபசுவாமி திருக்கோவிலுக்கு 2001 முதல் 2019 வரை நிலுவையாக உள்ள தஸ்திக் தொகையான 1 கோடியே 67 லட்சத்து 20 ஆயிரத்து 225 ரூபாய்க்கான காசோலைகளை ஸ்ரீ பத்பநாபசுவாமி திருக்கோவில் செயல் அலுவலரிடம் வழங்கினார்கள்.

திருவனந்தபுரம், ஸ்ரீ பத்பநாபசுவாமி திருக்கோவிலுக்கு 2001 முதல் 2019–ஆம் ஆண்டு வரை நிலுவையில் உள்ள தஸ்திக் தொகை வழங்குவது தொடர்பாக, நில நிருவாக ஆணையர் தலைமையில் இந்துசமய அறநிலையத்துறை உயர் அலுவலர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாபசுவாமி திருக்கோயில் நிர்வாக அலுவலர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில், ரூ.1,67,20,225/– நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும் என கணக்கிடப்பட்டு, நிலுவைத் தொகை வழங்குவதற்கான அரசாணை 18.10.2019 அன்று வெளியிடப்பட்டது.

அதன்படி, திருவனந்தபுரம், ஸ்ரீ பத்பநாபசுவாமி திருக்கோவிலுக்கு தஸ்திக் நிலுவைத் தொகையாக ரூ.1,67,20,225/–க்கான காசோலைகளை அத்திருக்கோவிலின் செயல் அலுவலரிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., நில நிர்வாக இணை ஆணையர் திருமதி கே. கற்பகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**